பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரி ஆர்ப்பாட்டம்

First Published : 24 Aug 2010 10:00:57 AM IST

நாமக்கல், ஆக. 23: பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாமக்கல்லில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

÷நாமக்கல் கோட்டாட்சியர் அலுவலகம் முன், சங்கத்தின் நாமக்கல் மாவட்டக் குழு சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட செயலர் சி. ரங்கசாமி தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் எஸ். கந்தசாமி, ஒன்றியத் தலைவர் முருகேசன், பால் உற்பத்தியாளர் சங்க மாவட்ட பொருளாளர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

÷கால்நடை தீவன விலை உள்பட அனைத்துப் பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளதால் பால் கொள்முதல் விலையை பசும்பால் லிட்டருக்கு ரூ. 5-ம், எருமை பால் லிட்டருக்கு ரூ. 8-ம் உயர்த்தி கொள்முதல் செய்ய வேண்டும், கர்நாடகத்தில் வழங்கப்படுதைப் போல கொள்முதல் செய்யும் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 2 மானியம் வழங்க வேண்டும், ஆரம்ப சங்கப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், கறவை மாடுகள் வாங்க ரூ. 30 ஆயிரம் மானியக் கடன் வழங்க வேண்டும், பால் நிலுவைத் தொகையை விரைந்து வழங்க வேண்டும், தமிழகத்தில் மூடப்பட்ட கால்நடை தீவன ஆலைகளை திறந்து பால் உற்பத்தியாளர்களுக்கு 50 சத மானியத்தில் ஆவின் கால்நடைத் தீவனம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

÷ இந்த ஆர்ப்பாட்டத்தில், பால் உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஆக.26-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

First Published : 24 Aug 2010 12:53:36 PM IST

பெரம்பலூர், ஆக. 23: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஆக. 26 ஆம் தேதி நடைபெறுகிறது என்று மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் வியாழக்கிழமை (ஆக. 26) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்பாக நீர்ப்பாசனம், வேளாண்மைக்கான கடன் உதவித் தொகைகள், இடுபொருள்கள், இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இக் கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என்றார் அவர்.

**" ஏக்கருக்கு |4 லட்சம் லாபம் தரும் திசு வாழை'**

First Published : 24 Aug 2010 01:57:13 PM IST

ஒசூர், ஆக.23: திசு வாழையை பயிரிட்டால் ஏக்கருக்கு |4 லட்சம் லாபத்தை ஈட்டித் தரும் என்று சிறந்த விவசாயி விருது பெற்ற ஒசூர் முன்னாள் எம்எல்ஏ வெங்கடசாமி கூறினார்.

தேசிய தோட்டக் கலைத்துறை சார்பில் சிறந்த விவசாயிக்கான விருது சனிக்கிழமை அவருக்கு வழங்கப்பட்டது. விருது கிடைத்தது பற்றி தெரிவித்த வெங்கடசாமி கூறியது:

ஜி.9 என்ற புதிய ரக வாழையை திசு வளர்ப்பு மூலம் பயிர் செய்தால் ஏக்கருக்கு 1,200 வாழை நடவு செய்ய முடியும். ஒரு வாழைத் தாரில் 12 முதல் 16 சீப்பு வாழை இருக்கும்.

ஒரு வாழைத்தார் 60 முதல் 70 கிலோ இருக்கும். விலை கிலோ |12 முதல் |20 வரை விற்பனை செய்ய முடியும்.

ஏக்கர் வாழை பயிரிட |75 ஆயிரம் செலவு ஆகும். அதே வேளையில் |4 லட்சம் வரை வாபம் ஈட்ட முடியும் என்றார்.

**செம்மை நெல் சாகுபடி செயல் திடல் அமைக்க மானியம்**

First Published : 24 Aug 2010 11:09:56 AM IST

திண்டுக்கல், ஆக. 23: செம்மை நெல் சாகுபடி செயல் திடல் அமைக்க அரசு மானியம் வழங்குகிறது.

நெல் சாகுபடியின் போது விவசாயிக்குத் தோன்றும் பூதாகரமான பிரச்னை நடவுக்கும், களை எடுக்கவும் ஆள்கள் கிடைக்காதது, அதிக நீர் செலவாவது, எதிர்பார்த்த மகசூல் கிடைக்காதது போன்றவை ஆகும்.

இம் மூன்று பிரச்னைகளைச் சமாளித்து அதிக மகசூல் கிடைக்க தற்சமயம் விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் கூறிவரும் ஒரு அதிமுக்கிய தொழில்நுட்பம் செம்மை நெல் சாகுபடி முறை. இம் முறை மூலம் மிகக் குறைந்த விதை அளவைக் கொண்டு குறைந்த நீர் தேவையைப் பயன்படுத்தி, எளிதில் களைகளில் இருந்து பாதுகாப்பு அளித்து அதிக மகசூல் கிடைக்கச் செய்கிறது.

14 நாள்களிலேயே நாற்றுகளைப் பறித்து வரிசைக்கு வரிசை, செடிக்குச் செடி 25 செ.மீ இடைவெளியில் ஒற்றை நாற்று முறையில் நடவு செய்தால், ஒரு நாற்றானது சுமார் 70 முதல் 80 தூர்களை உற்பத்தி செய்து அதிக மகசூல் கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு உழவர்களுக்கு பலன் அளிக்கும் வகையில் வடமதுரை வட்டாரத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின கீழ் செம்மை நெல் சாகுபடி செயல் திடல் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திடலில் பங்கு பெறும் விவசாயிகளுக்கு நெல் நடவு செய்யும் மார்க்கர், களை எடுக்கும் கருவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள நெல் சாகுபடியாளர்கள் தங்களது பெயர்களை வடமதுரை வேளாண் விரிவாக்க மைய அதிகாரிகள், உதவி வேளாண்மை அலுவலர்களிடம் பதிவு செய்து பயனடைய வேண்டும் என வடமதுரை வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

First Published : 24 Aug 2010 01:16:51 PM IST

திருவாரூர், ஆக. 23: திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆக. 31-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் ஏற்கனவே ஆக. 25-ம் தேதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க இயலாத நிர்வாகக் காரணங்களால் ஆக. 31-ம் தேதி முற்பகல் 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமையில் கூட்டம் நடைபெறுமென ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோளத்தின் மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்ப பயிற்சி**

First Published : 24 Aug 2010 01:47:08 PM IST

கோவில்பட்டி, ஆக. 23: கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரியில் மக்காச்சோளத்தின் மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் பற்றிய ஒருநாள் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

மானாவாரிக்கு ஏற்ற மக்காச்சோள ரகங்கள், மக்காச் சோளத்திற்கு ஏற்ற உர மேலாண்மை, அங்கக உர மேலாண்மை, மக்காச் சோளத்தில் பூச்சிகள் தாக்குதலைக் குறைப்பது குறித்து தெரிவிக்கப்பட்டது.

மக்காச்சோளம் அறுவடை செய்யும் இயந்திரம் உள்ளிட்ட வேலையாள்களைக் குறைக்க உதவும் நவீன இயந்திரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நபார்டு வங்கியின் விவசாய பயனாளிகளுக்கான இப் பயிற்சி முகாமிற்கு கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் சுந்தர்சிங் ராஜபாண்டியன் தலைமை தாங்கினார்.

கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் ஜவாஹர் பேசினார்.

பின்னர், விவசாயிகளுக்கு மானாவாரி விவசாயத்தில் மக்காச்சோளத்தின் மகசூலை அதிகரிக்கும் பல தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் ஆலோசனை வழங்கினர்.

பேராசிரியர்கள் சங்கரபாண்டியன், உமா மகேஸ்வரி, ரேணுகாதேவி, பூமிராஜ், ஆனந்தி, ராஜேஸ்வரி ஆகியோர் விளக்கிப் பேசினர்.

தூத்துக்குடி நபார்டு வங்கி மேலாளர் நடராஜன் வரவேற்றார். பேராசிரியர் முத்துலட்சுமி நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தினர் செய்திருந்தனர்.

**நுண்நீர் பாசன முறை செயல் விளக்க முகாம்**

First Published : 23 Aug 2010 11:53:26 AM IST

நாகப்பட்டினம், ஆக. 22: நாகை மாவட்டம், சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நுண் நீர் பாசன முறை செயல்விளக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தங்க. தாமோதரன் தலைமை வகித்தார்.

நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் வேணுகோபால், காரைக்கால் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராஜேந்திரன், வேளாண் பொறியியல் துறை இணைப் பேராசிரியர் ஜான். குணசேகர் ஆகியோர் நுண் நீர் பாசன முறையின் அவசியம் மற்றும் பயன்களை விளக்கி பேசினர்.

சொட்டு நீர் பாசனக் கருவிகள், கால்களால் இயக்கக் கூடிய பம்பு மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகளின் செயல்பாடுகள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. சுமார் 150 விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு 50 சதம் மானியத்தில் காய்கறி விதைகள்**

First Published : 24 Aug 2010 01:00:57 PM IST

ஆலங்குடி, ஆக. 23: ஆலங்குடி பகுதி விவசாயிகளுக்கு 50 சதம் மானியத்தில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன.

இதுதொடர்பாக தோட்டக்கலைத் துறை அலுவலர் எஸ். பழனிச்சாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் சார்பில் தற்போது சாகுபடி மேற்கொள்வதற்கு ஏற்ற கத்தரி, வெண்டை, மிளகாய், கொத்தவரை, கீரை வகைகள், புடலை, பூசணி, பரங்கி, சுரை உள்ளிட்ட காய்கறி பயிர்களுக்கான விதைகள் 50 சதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தில் பயன்பெறும் விவசாயிகள் ஆலங்குடி, சந்தைப்பேட்டையில் இயங்கும் தோட்டக்கலைத் துறை அலுவலகத்தை அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு 96292 42860 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**உரம் விற்பனையாளர்களுக்கு வேளாண் இணை இயக்குநர் எச்சரிக்கை**

First Published : 24 Aug 2010 11:31:16 AM IST

சிவகங்கை,ஆக.23: உரம் விற்பனையில் விதிமுறைகளைக் கடைபிடிக்காவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிவகங்கை வேளாண் இணை இயக்குநர் தங்கச்சாமி பாண்டியன் எச்சரித்து உள்ளார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள உரக்கடைகள் சிலவற்றில் அவர் நேரில் ஆய்வு செய்தபிறகு விடுத்துள்ள எச்சரிக்கை அறிவிப்பு:

உரக்கடை உரிமையாளர்கள் தரமான உரங்களை மட்டுமே விவசாயிகளுக்கு விற்க வேண்டும். அரசு நிர்ணயித்த விலைக்கு மட்டுமே விற்பனை செய்யவேண்டும்.

வாங்கும் உரத்துக்கான ரசீது வழங்கி அதில் விவசாயிகளின் கையொப்பம் பெற வேண்டும்.உர விலைப் பட்டியலில் விற்பனை விலை எழுதப்பட வேண்டும்.

விதைகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்க அவற்றுக்கான உரிமம் பெற்றிருக்க வேண்டும். மேற்கண்ட நடைமுறைகளைக் கடைபிடிக்காத உர விற்பனையாளர்களுக்கு

உரக்கட்டுப்பாடு ஆணை 1985-ன்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**விவசாயக் கூலியை சமாளிக்க புதிய திட்டம் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,01:21 IST

கடலூர் : விவசாயக் கூலி தட்டுப் பாட்டை சமாளிக்க தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் புதிய "பசுமைப்படை' திட்டம் அறிமுகப்படுத்த உள்ளனர். மத்திய அரசின் திட்டமான கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தில் கிராமங்களில் உள்ள விவசாய கூலிகளுக்கு 100 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. ஆண், பெண்களுக்கு சமமான ஊதியம் என்பதால் பெரும்பாலான பெண் கூலித் தொழிலாளர்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கு சென்று பணி செய்ய ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அதிகமாக கூலி கொடுத்து செய்யும் விவசாயம் லாபகரமாக இருக் காது என்பதால், பெரும் பாலான விவசாயிகள் சவுக்கு, எண்ணெய் பனை, மூங்கில், முருங்கை, தென்னை போன்ற பயிர் களை பயிரிட துவங்கியுள்ளனர். இதனால் நாட் டில் விவசாயம் குறைந்து உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை உணர்ந்த வேளாண்துறை களை பறிக்கும் கருவி, நடவு கருவி உட்பட பல்வேறு இயந்திரங்களைக் கண்டுபிடித்து அர்ப்பணித்துள்ளது. இருப்பினும் இதை இயக் குவதற்கு குறைந்த பட்ச கூலியாட்கள் தேவைப்படுவதால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புதிய அமைப்பை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த "பசுமைப் படை அமைப்பு' விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. கடலூர் மாவட்டத்தில் 166 தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. அவற்றில் கரைமேடு, ஆயங்குடி, கருங் குழி, குறிஞ்சிப்பாடி உட் பட 5 தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகள் தேர்வு செய்யப்பட்டுள் ளன. இந்த வங்கிகளில் அங்கத்தினர்களாக உள்ள விவசாயிகளை இணைத்து "பசுமைப்படை' என்கிற அமைப்பை உருவாக்கி அவர்கள் மூலம் விவசாயிகளுக்கு இயந்திரங்களைக் கொண்டு நடவு செய்து கொடுக்கும் திட்டத்தை உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் ஏக்கர் ஒன்றுக்கு நடவு செய்து கொடுக்க குறைந்தபட்சத் தொகையை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொள்கின்றனர். நடவுப் பணி முடிந்ததும் களை எடுப்பது, உரம் போடுவது, நீர் நிர்வாகம் போன்றவற்றை

கூலியாட்களின்றி விவசாயிகள் எளிதில் பயிர் செய்ய முடியும். மேலும் களை எடுப்பது உள்ளிட்ட மற்ற பணிகளையும் இயந் திரங்களைக் கொண்டு செயல்படுத்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இயந்திரங்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இது குறித்து கீழமூங்கிலடி கிராமத்தில் பசுமைப் படை விவசாயிகளுக்கு நவீன இயந்திரங் கள் கையாளுதல் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. கடலூர் மத்திய கூட்டுறவு வங்கி தனி அதிகாரி மிருணாளினி கூறும் போது, "இந்த பசுமைப் படை திட்டம் பரிச்சார்த்தமாக செய்யப்படுகிறது. இயந்திரங்கள் மூலம் நாற்றுவிடுவது, நடவு செய்வது பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சிறப்பாக அமையுமானால் மேலும் விரிவுபடுத்தப்படும்' என்றார்.

**செய் நேர்த்தி முறையை பயன்படுத்தினால் தானியங்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,01:56 IST

விழுப்புரம் : செய் நேர்த்தி முறையைப் பின்பற்றி சேமித்து வைக்கப்படும் சிறு தானியங்களான கம்பு மற்றும் ராகிக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்று உழவர் சந்தை வேளாண் அலுவலர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத் தில் கோலியனூர், விக்கிரவாண்டி, காணை, கண்டமங்கலம் உள்ளிட்ட ஒன் றிய பகுதிகளில் தற்போது கம்பு, ராகி போன்ற சிறு தானியங்கள் அறுவடை செய்யப்படுகிறது. சிறு தானியங்களில் மாவுச்சத்து மற்றும் புரத சத்த அளவை பொறுத்தே கூடுதல் விலை கிடைக்கிறது.

எனவே விவசாயிகள் கதிர்கள் முதிர்ந்து இலைகள் பழுப்பு நிறமாக மாறியவுடன் கதிர்களை மட் டும் தனியாக அறுவடை செய்ய வேண்டும். மழை நேரங்களில் அறுவடை செய் யும் போது பூஞ்சாணம் தாக்கிய கதிர்களை தனியே பிரித்து உலர்த்த வேண் டும். உலர வைத்த கதிர் களை கருவிகள் அல்லது கல் உருளைகள் பயன்படுத்தி தானியங்களை பிரித்தெடுக்க வேண்டும். தானியங்களில் கல், மண் போன்றவற்றை நீக்கி நிழலில் உலர்த்தி உட்பக்கம் பிளாஸ்டிக்கால் ஆன சாக்கு களில் தானியங்களை சேமித்து வைக்க வேண்டும்.இந்த தானியங்களை மாதம் ஒருமுறை வெயிலில் உலர வைத்து, ஆறவிட்டு சேமித்து வைப்பதன் மூலம் வண்டுகள் தானியத்தை சேதப்படுத்தாமல் பாதுகாக்கலாம். இவ் வாறு செய் நேர்த்தி செய் யும் தானியங்களுக்கு மார்க் கெட்டில் நல்ல விலை கிடைக்கும்.

பட்டுப்பூச்சி வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் : வங்கி கடனுதவி வழங்க வேண்டும்

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,01:47 IST

அவலூர்பேட்டை : விழுப்புரம் மாவட் டத்தில் பட்டுப்பூச்சி வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அரசு மானிய உதவி வழங்கப்பட்டு வரும் நிலையில், வங்கி கடனுதவி உள்ளிட்ட சலுகைகள் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர் பேட்டை ஊராட்சிக்குட் பட்ட ரவணாம்பட்டு கிராமத்தில் பட்டு பூச்சி வளர்ப்பு மையம் உள்ளது. இப்பகுதியில் 15 விவசாயிகள் தொடர்ந்து பட்டு பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். இதற்கான முட்டைகளை தர்மபுரியிலிருந்து விவசாயிகள் வாங்கி வருகின்றனர். இந்த முட்டைகளை ஈரமான துணிப்பையில் குளிர்ந்த தட்ப வெப் பத்துடன் பாதுகாக்கின்றனர். ஒரு வாரத்திற்கு பின் னர் வெள்ளை முட்டை கருப்பாகி விடும், இதை கருப்பு பேப்பரில் மூடி வைக்கின்றனர். இதிலிருந்து 24 மணி நேரம் கழித்து புழு வெளியேறுகிறது. இந்த புழுக்களுக்கு மல்பரி தழையை சிறிய அளவில் வெட்டி தினம் மூன்று வேளைக்கு போடுகின்றனர். மூன்று நாள் கழித்து புழு தோல் உரிக்கும். 24 மணி நேரம் கழித்து தோலிலிருந்து புழு வெளியேறும். மீண்டும் தழையை அதிகளவு போடவேண்டும்.

இதே போல் தோல் உரி பருவத்தை தொடர்ந்து 23ம் நாளில் புழு கூடு கட்ட ஆரம்பிக்கும். பின்னர் 3 அல்லது 4 நாட்கள் கழித்து தர்மபுரியில் உள்ள அரசு பட்டுப்புழு அங்காடிக்கு விற்பனைக்காக பஸ்சில் விவசாயிகள் எடுத்து செல்கின்றனர். அங்கு தரத்திற்கு ஏற்ப கூடு கட்டிய பட்டுப்புழுக்கள் பகிரங்க ஏலம் விடப்படுகிறது. இப்பகுதியில் அதிகமாக மஞ்சள் கூடு வளர்ப்பில் தான் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். ஒரு கிலோ அதிக பட்சமாக 170 ரூபாய் முதல் 230 ரூபாய் வரை விலை போகி றது. ஒவ்வொரு விவசாயியும் அதிகபட்சமாக 40 கிலோ புழுக்களை உற் பத்தி செய்கின்றனர். இன் னும் அதிகளவில் செய்வதற்கு மூல தனம் இல்லை என தெரிவிக்கின்றனர். ஆண்டிற்கு 4 முறை இத் தொழிலை செய்கின்றனர். மழை மற்றும் கோடை வெப்பத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட முடியாது என விவசாயிகள் தெரிவித்தனர். ரவணாம்பட்டில் உள்ள பட்டுப்புழு வளர்ப்பு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் வங்கி கடன் உதவி வழங்கிட கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு மானியம் உண்டு வங்கி கடன் கிடைக்குமா? : பட்டுப்பூச்சி வளர்ப்புக்கு அரசு மானிய நிதி உதவி வழங்கப்படுகிறது. ஆனால் பாங்க் கடனுதவி கிடைப்பதில்லை என பட்டுப்பூச்சி வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். திருவெண்ணெய்நல்லூர் அடுத்த சின்னசெவலை பகுதியில் பட்டுப் பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள நடராஜன் கூறுகையில், எனக்கு சொந்தமான நிலத்தில் பட்டுப்பூச்சி வளர்த்து வருகிறேன். பட்டுப்பூச்சியின் உணவுக்காக மல்பரி தழைகளை அங்கேயே

பயிரிட்டு பூச்சிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்த தழைகளை உண்ணும் பூச்சிகள் எச்சத்தின் வழியாக பட்டு கூடுகளை வெளியாக்கி சுருட்டிக் கொள்கிறது. பின் இதனை சேகரித்து தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளுக்கு எடுத்து சென்று விற்கப்படுகிறது. மாதம் ஒரு முறை இந்த பட்டு பூச்சிகள் வெளியிடும் பட்டு கூடுகள் 150 முதல் 200 கிலோ விற்கப்படுகிறது. பின் பட்டு பூச்சிகளின் முட்டைகளை வாங்கி வந்து பின் அதனை பெருக்கி பூச்சிகள் மூலம் பட்டு கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. பட்டு பூச்சி வளர்ப்பிக்காக அரசு மானியமாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கி உள்ளது. பராமரிப்புக்காக இங்குள்ள வங்கியில் 25 ஆயிரம் ரூபாய் கடனுதவி கேட்டும் கிடைக்கவில்லை. வங்கி கடன் கிடைக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,01:26 IST

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத் தில் நேற்று முன் முதல் பரவலாக மழை பெய்யும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் கடந்த ஜூலை மாதம் முதல் பரவலாக தென்மேற்கு பருவ மழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் மாலை முதல் தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்கிறது.
நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் தாலுகா வாரியாக மழை விவரம்: விழுப்புரத்தில் 43 மி.மீ., திண்டிவனத்தில் 14 மி.மீ., திருக்கோவிலூரில் 120 மி.மீ., உளுந்தூர் பேட்டையில் 45 மி.மீ., கள்ளக்குறிச்சியில் 165 மி.மீ., மற்றும் சங்கராபுரத்தில் 145 மி.மீ., அளவும் மழை பெய்துள்ளது. தொடர்ந்து நேற்று பகல் முழுவதும் பரவலாக கன மழை பெய்ததால் ஏரி, குளம், குட்டைகளில் நீர் மட்டம் அதிகரித்து வருகின்றன. மணிலா, உளுந்து, துவரை, தினை உள்ளிட்ட மானாவாரி பயிர் செய்துள்ள விவசாயிகள் மழையால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**சிறு விவசாய சங்க துவக்க விழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:27 IST

கோத்தகிரி: கோத்தகிரி கேர்கம்பை கிராமத்தில் ஸ்ரீ ஹெத்தையம்மன் சிறு விவசாயிகள் சங்க துவக்க விழா நடத்தப்பட்டது. கிராம பிரமுகர் சில்லபாபு வரவேற்றார். கிராம முக்கியஸ்தர் ராமன் தலைமை வகித்தார். கோத்தகிரி வட்டார காங்கிரஸ் தலைவர் பில்லன், கிராம நிர்வாக அலுவலர் போஜராஜ் மற்றும்கண்ணவரை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். குன்னூர் உபாசியை சேர்ந்த டாக்டர் குமாரவடிவேலு, டாக்டர் சண்முகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று, சங்கம் துவக்கப்படுவதன் அவசியம்,

விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மை குறித்து விளக்கம் அளித்தனர். நிகழ்ச்சியில், சங்க உறுப்பினர்கள் போஜன், ஆலன், சந்திரன், கிருஷ்ணன், ஹிரியன், லிங்கராஜ் உட்பட கேர்கம்பை சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து விவசாயிகள் திரளாக பங்கேற்றனர். சங்க நிர்வாகி ராஜூ நன்றி கூறினார்.

**எதிர்பார்த்த மழை பெய்யவில்லை தேயிலை செடிகளுக்கு நோய் அபாயம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:23 IST

குன்னூர்:குன்னூர் சுற்றுப்புற பகுதிகளில் எதிர்பார்த்த மழை பெய்யாததால், தேயிலை செடிகளை நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது; "கடந்த 10 ஆண்டு மழையளவை ஒப்பிடுகையில் இந்தாண்டு மிக குறைந்தளவு மழை மட்டுமே பெய்துள்ளது,' என உபாசி ஆராய்ச்சி நிலையம் கணக்கிட்டுள்ளது.குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் கடந்த மூன்று நாளாக மேக மூட்டத்துடன் கூடிய பரவலான மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் குளிரான காலநிலை நிலவுகிறது.

கடந்த இரு நாள் பெய்த மழையில், கோத்தகிரி, குன்னூர் பகுதிகளில் தாழ்வான பகுதிகளில் உள்ள விளை நிலங்கள் நீரில் மூழ்கின. மேகமூட்டத்தால், தேயிலை தோட்டங்களில் கொப்புள நோய் ஏற்பட துவங்கியுள்ளது.குன்னூர் உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய முதன்மை ஆலோசகர்டாக்டர். ராதாகிருஷ்ணன் கூறியதாவது;குன்னூர், கோத்தகிரி, ஊட்டி, குந்தா பகுதிகளில் இந்தாண்டு எதிர்பார்த்த அளவு மழை பெய்யவில்லை. கடந்த 10 ஆண்டுகளைஒப்பிடும் போது இந்தாண்டு பெய்த மழையின் அளவு மிகக்குறைவு.குன்னூரில், கடந்தாண்டு(2009) ஜனவரி - ஜூலை காலகட்டத்தில் 39.7 செ.மீ., மழை பதிவானது. இந்தாண்டு(2010) ஜனவரி - ஜூலை கால கட்டத்தில் 31.7 செ.மீ., மழை பெய்துள்ளது. கடந்த 10 ஆண்டுக்கு முன் இதே காலகட்டத்தில் 49.8 செ.மீ., மழை பெய்தது. கொலக்கம்பை சுற்றுவட்டார பகுதிகளில் கடந்தாண்டின் (2009)முதல் ஏழு மாதங்களில் 32.6 செ.மீ., மழை, இந்தாண்டு (2010) முதல் ஏழு மாதங்களில் 21.6 செ.மீ., மழை பெய்தது. கடந்தாண்டு 10 ஆண்டுக்கு முன் இதே காலகட்டத்தில் 43.6 செ.மீ., மழை பெய்துள்ளது.கோத்தகிரியில் கடந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில், 46.8 செ.மீ., இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் 40.5 செ.மீ., கடந்த 10 ஆண்டுக்கு முன் இதே காலகட்டத்தில் 61.72 செ.மீ., மழை பெய்துள்ளது. குந்தாவில், கடந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில், 59.2 செ.மீ., இந்தாண்டு 40.7 செ.மீ., கடந்தாண்டு 10 ஆண்டுக்கு முன் 70.9 செ.மீ., மழை பெய்துள்ளது. ஊட்டியில் கடந்தாண்டு ஜனவரி - ஜூலையில் 61.8 செ.மீட்டர், இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் 47.2 செ.மீ., கடந்த 10 ஆண்டுக்கு முன் 65.4 செ.மீ., மழை பெய்துள்ளது.வெப்ப சலனத்தால் தான் தற்போது மழை பெய்கிறது. கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் இந்தாண்டின் முதல் ஏழு மாதத்தில் பருவ மழையின் அளவு வெகுவாக குறைந்துள்ளது. இம்மாத துவக்கத்தில் பெய்த மழையும் எதிர்பார்த்த பலனை விவசாயிகளுக்கு

கொடுக்கவில்லை. தினமும், 6 -7 மணி நேரம் இருந்த சூரிய ஒளியின் அளவு, தற்போது 3 - 4 மணி நேரமாக குறைந்துள்ளது. காற்றின் ஈரப்பதம் அதிகளவில் இருப்பதால் பசுந்தேயிலை வளர்ச்சி பாதிக்கப்பட்டு, மகசூல் குறையும் நிலை உள்ளது. இவ்வாறு, ராதாகிருஷ்ணன் கூறினார்.

**ஆக., 27ல்விவசாயிகள்குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,03:32 IST

திருச்சி: திருச்சி கலெக்டர் சவுண்டையா வெளியிட்ட அறிக்கை:திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகஸ்ட் 27ம் தேதி காலை 10.30 மணிக்கு, கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடக்கிறது.கலெக்டர் சவுண்டையா தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, நீர்ப்பாசனம், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண் சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டம் குறித்து நேரிலோ, மனுக்ள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.விவசாயிகள் இவ்வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மானியத்தில் இடுபொருள் விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,03:05 IST

குளித்தலை: "குளித்தலை பகுதி செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கு மானியத்தில் இடுபொருள் வழங்கப்படுகிறது'என, குளித்தலை வேளாண் உதவி இயக்குநர் சேகர் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:குளித்தலை வட்டார வேளாண் துறை சார்பில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குளித்தலை வட்டாரத்தில் 80 ஏக்கர் நிலத்தில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.ஏக்கர் ஒன்றுக்கு செம்மை நெல் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் மதிப்புள்ள இடுபொருள் மானியமாக வழங்கப்பட உள்ளது. நடப்பாண்டு செம்மை நெல் சாகுபடிக்கு மானியமாக 2.40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.எனவே, செம்மை நெல் சாகுபடி முறையில் நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களது பகுதி உதவி வேளாண் அலுவலர் அல்லது துணை வேளாண்மை அலுவலரை அணுகலாம்.

**நாளை பெரம்பலூர் மாவட்ட விவசாய குறைதீர் கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,03:09 IST

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை 26ம் தேதி நடக்கிறது' என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை 26ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமையில் நடக்கிறது.விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண் இயந்திரம், விவசாயி மேம்பாட்டுக்கான நலத்திட்டம் பற்றிய முறையீடு பற்றி விவாதிக்கப்படும்.எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று குறை தெரிவித்து பயன்பெறலாம். அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.

**செப்.,1ல் புள்ளம்பாடி வாய்க்கால் திறப்பு?விவசாய குறைதீர் கூட்டத்தில் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,03:56 IST

அரியலூர்: செப்டம்பர் 1ம் தேதி புள்ளம்பாடி வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அரியலூரில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அரியலூர் கலெக்டர் ஆபிரகாம் தலைமையில் நடந்த விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டத்தில், டி.ஆர்.ஓ., பிச்சை, கலெக்டரின் வேளாண் பிரிவு அலுவலர் ராஜராஜன், வேளாண் துணை இயக்குநர் விஜயகுமார் முன்னிலை வகித்தனர். அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் சந்தான கிருஷ்ணன் வரவேற்றார்.விவசாயிகளின் கோரிக்கை குறித்து வேளாண் பிரதிநிதிகள் செங்கமுத்து, பிச்சைபிள்ளை, அம்பேத்கர் வழியன், நாகரத்தினம் உள்ளிட்டோர் பேசினர். கோரிக்கைகளுக்கு பதிலளித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பேசியதாவது:அரியலூர் மாவட்ட விவசாய பணிகளின் பாசன மேம்பாட்டுக்காக, செப்டம்பர் 1ம் தேதி புள்ளம்பாடி வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொன்னாறு வாய்க்காலில் வழக்கமாக ஆகஸ்ட் மாதம் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.தற்போது நடந்து வரும் டீஷெல்ட்டர் பணி முடிந்தவுடன், கொள்ளிடம் ஆற்றின் நீர்மட்டத்துக்கு ஏற்ப தண்ணீர் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.அரியலூர்-தஞ்சாவூர் மாவட்டங்களை இணைக்கும் அணைக்கரை பாலம், கனரக வாகன போக்குவரத்துக்கு உகந்தது இல்லை என்பதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, அதில் இலகுரக வாகனங்கள் மட்டுமே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுகிறது. இதையடுத்து பல்வேறு தரப்பினரும் நடத்திய போராட்டத்தை தொடர்ந்து, மாவட்ட நிர்வாகம் சார்பில் இதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது.மேற்கண்ட சாலை தேசிய நெடுஞ்சாலை கட்டுப்பாட்டில் உள்ளதால், நகாய் எனப்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில், புதிய அணைக்கரை

பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலைகளை மேம்படுத்த நடப்பு நிதியாண்டுக்கு 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

**கனமழையால் கம்பு பயிர் சேதம் தியாகதுருகம் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,02:22 IST

தியாகதுருகம் : கனமழை பெய்ததால் தியாகதுருகம் பகுதியில் மானாவாரியில் பயிரிடப்பட்டிருந்த கம்பு பயிர்கள் சேதம்டைந்தன. விழுப்புரம் மாவட்டம் தியாகதுருகம் பகுதியில் கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இவ்வாண்டு 1,600 ஏக்கர் பரப்பில் மானாவாரி நிலங்களில் கம்பு பயிரிடப்பட்டுள்ளது. குறித்த நேரத்தில் மழை பெய்ததால் விவசாயிகள் தங்களின் நிலங்களில் ஆர்வமுடன் கம்பு சாகுபடி செய்தனர். அவ்வப்போது பெய்த மழையால் கம்பு பயிர் நன்கு வளர்ந்து தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் இருக்கிறது. கடந்த 20ம் தேதி இரவு துவங்கி இரு தினங்களாக தியாகதுருகம் பகுதியில் பரவலாக நல்ல மழை பெய்தது. காற்றும் வீசியதால் கம்பு பயிர் உடைந்து நிலத்தில் சாய்ந்தது. அறுவடை செய்யும் தருணத்தில் பல நூறு ஏக்கர் பரப்பில் கம்பு பயிர்கள் உடைந்து மண்ணில் சாய்ந்ததால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் முற்றிய கம்பு கதிர் மண்ணில் புதைந்து முளைத்து சேதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் குறித்த நேரத்தில் மழையின்றி போனதால் கம்பு பயிரிடுவதையே விவசாயிகள் தவிர்த்து வந்தனர். இருப்பினும் தற்போது நம்பிக்கையுடன் சாகுபடி செய்த கம்பு பயிர் கனமழையால் சேதமானதால் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது என்று விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**200 குவிண்டால் பருத்தி; ரூ.7.50 லட்சத்துக்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2010,02:18 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் 200 குவிண்டால் பருத்தி 7.50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், வாழப்பாடி, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திட்டக்குடி ஆகிய பகுதியில் விளைவிக்கப்பட்ட பருத்தியை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., பருத்தி குவிண்டால் அதிகபட்சம் 3,869 ரூபாயும், குறைந்தப்பட்சம் 3,599 ரூபாயும், பி.டி., பருத்தி குவிண்டால் அதிகபட்சம் 3,946 ரூபாய்,

குறைந்தபட்சம் 3,309 ரூபாய்க்கு ஏலம் போனது. 700 மூட்டைகள் கொண்ட 200 குவிண்டால் பருத்தி 7.50 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

**விவசாய மான்யங்கள் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,01:12 IST

வடமதுரை : வடமதுரை வட்டாரத்தில் மத்திய அரசு உதவியுடன் அமல் செய்யப்படும் விதை கிராம திட்டத்தில் தானியங்களை சேமிக்கும் வண்ணம் தானியக் குதிர்கள் அமைக்க அரசு மான்யம் வழங்குகிறது. இரண்டு டன் தானிய குதிர் அமைக்க ரூ. 2 ஆயிரமும், ஒரு டன்னிற்கு ரூ. ஒரு ஆயிரமும் மான்யம் வழங்கப்படும். ஆதிதிராவிடர்களுக்கு இரண்டு டன் குதிருக்கு ரூ. 3 ஆயிரமும், ஒரு டன்னிற்கு ரூ.1500ம் வழங்கப்படும். அதிக மகசூல் கிடைப்பதற்கான அதி முக்கிய தொழில் நுட்பம் செம்மை நெல் சாகுபடி. குறைந்த விதையளவில், குறைந்த நீரில் அதிக மகசூல் கிடைக்க செய்கிறது. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செம்மை நெல் சாகுபடி செயல் திடல் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பங்கேற்கும் விவசாயிகளுக்கு நெல் நடவும் செய்யும் மார்க்கர், களை எடுக்கும் கருவிகள் மான்யத்தில் வழங்கப்படும்.

எண்ணெய் வித்துக்களின் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கில், இவ் வாண்டு மான்யத்தில் இடுபொருட்கள் வழங்க ஐசோபாம் எண்ணெய் வித்து அபிவிருத்தி திட்டம் கொண்டு வரப் பட்டுள்ளது. தரமான விதைப்பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு கூடுதல் விலையில் கொள்முதல் மான்யம், குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சிடவும், விளக்க திடல் அமைக்கவும், உரங்கள், பாதுகாப்பு கருவிகள், மருந்துகள் என பல்வேறு மான்யங்கள் வழங்கப்படும். மான்யங்கள் பெற விரும்பும் விவசாயிகள் சிட்டா, அடங்கல் சான்றுடன் வேளாண் மையத்தை அணுகலாம் என உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**முறையான விதை வணிக உரிமம் பெறாதவர்கள் மீது நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:32 IST

சேலம்: "முறையான விதை வணிக உரிமம் பெறாத நர்ஸரி உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்' என, விதை ஆய்வு துணை இயக்குனர் மணிமொழி எச்சரித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:விதைகள் சட்டம் 1966ன் படி விதைகள் என்பது விதைப்பதற்காக அல்லது நடுவதற்காக பயன்படுத்தப்படும் பின்வரும் வகைகளின் விதைகள், நாற்றுக்கள் என பொருள் படும்.உணவுப் பயிர்களின் விதைகள் ( உணவிற்காக பயன்படும் எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகளின் விதைகள் அடங்கும்), பருத்தி விதைகள்,

கால்நடை தீவன விதைகள், சணல் விதைகள் போன்ற விதைகளுக்கு அனைவரும் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.

அலங்காரச் செடிகள் மற்றும் வாசனை பயிர்கள் நீங்கலாக அனைத்து வகை நர்ஸரிகள், நாற்றாங்கால், நாற்றுப் பண்ணைகள் ஆகியவை அடங்கும். நர்ஸரிகள், தென்னை நாற்றாங்கால், காய்கறி நாற்றுப் பண்ணைகள், பழச்செடிகள் விற்பனை செய்யும் நர்ஸரி உரிமையாளர்கள் விதை வணிகம் உரிமம் பெறாமல், வணிகம் செய்வது, விதைகள் விற்பது சட்டப்படி குற்றம்.எனவே, உரிமம் பெறாமல் உள்ள நர்ஸரி உரிமையாளர்கள் உடனடியாக விதை வணிக உரிமம் பெற்று விற்பனை செய்ய வேண்டும். உரிமம் பெறாமல் விதைகளை விற்பனை செய்பவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.நர்ஸரி உரிமையாளர்கள் விதை வணிக உரிமம் பெற, ஈரோடு பெருந்துறை ரோட்டில் இயங்கிவரும் விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்தை நேரில் அணுகலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்

**வேளாண் மையத்தில் நெல் விதை இருப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:18 IST

நாமக்கல்: "புதுச்சத்திரம், புதன்சந்தை, திருமலைப்பட்டி வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தேவையான நெல் விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளது' என, வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை: புதுச்சத்திரம் வட்டாரத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக வருவாய் ஈட்டலாம். இம்முறையில் சாகுபடி செய்ய ஏக்கருக்கு மூன்று கிலோ விதை போதுமானது. அந்த விதையை ஒரு சென்ட் அளவு நாற்றங்காலில் மேட்டுப்பாத்தி அமைத்து விதைக்க வேண்டும். அதனால் நல்ல நாற்றை உற்பத்தி செய்யலாம்.
பயிரிட்ட 14 நாட்களில் நாற்றுகளை பறித்து 25 சென்டிமீட்டர் இடைவெளியில் ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். கோனாமீட்டர் களையெடுக்கும் கருவியை பயன்படுத்தி நடவு செய்த 16ம் நாள் முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை களையெடுக்க வேண்டும். அதனால், நெல்பயிரில் வேர் வளர்ச்சி அதிமாகி தூர்கள் வெடிக்கும்.
மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து வேரின் வளர்ச்சியை துரிதப்படுத்தும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான உரமிட வேண்டும். அதனால் திரட்சியான நெல்மணிகள் கிடைப்பதுடன் அதிக மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான ஏ.டி.டி., 43 மற்றும் ஏ.டி.டி., 45 நெல் விதைகள் புதுச்சத்திரம், புதன்சந்தை மற்றும் திருமலைப்பட்டி ஆகிய வேளாண்

விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு, கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காலாவதி விதைகளை கண்டறிய திடீர் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:06 IST

ராசிபுரம்: ராசிபுரம் பகுதியில் விதை ஆய்வு துணை இயக்குனர் தலைமையிலான அலுவலர்கள் திடீர் ஆய்வு செய்தனர். அப்போது, காலாவதி விதைகள் இருந்தால் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என, எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில்  போலி விதைகள் புழக்கத்தில் இருப்பதை கண்காணிக்க, சேலம் விதை ஆய்வு துணை இயக்குனர் தங்கராஜ் தலைமையில் விதை ஆய்வாளர்களை கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.தனிப்படையினர் ராசிரம் பகுதியில் உள்ள தனியார் விதை விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது, இருப்பில் உள்ள விதைகளுக்கான கொள்முதல் ஆதாரம் சரிபார்க்கப்பட்டது. விற்பனை நிலையங்களில் காலாவதி விதைகள் உள்ளதா என ஆய்வு செய்தனர். இருப்பில் இருந்த பி.டி., பருத்தி விதைக் குவில்களில் இருந்து பரிசோதனைக்கு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டது. காலாவதி விதை இருப்பது கண்டயறிப்பட்டால் கடும் குற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என, ஆய்வு மேற்கொண்ட அலுவலர்கள் எச்சரித்தனர்.
சேலம், நாமக்கல் மாவட்ட விதை ஆய்வாளர்கள் உட்பட பலர் ஆய்வுப்பணியில் ஈடுபட்டனர்.

**விவசாய இடுபொருள் வியாபாரிகள் சங்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,02:14 IST

தர்மபுரி: தர்மபுரியில் மாவட்ட விவசாய இடு பொருள் வியாபாரிகள் சங்க மூன்றாம் ஆண்டு பொதுக்கு மற்றும் உரக்கட்டுப்பாடு ஆணை விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். செயலாளர் டில்லீஸ்குமார் வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் மனோகரன் அரசின் வேளாண் திட்டங்கள் குறித்து விளக்கினார். உர கையேட்டை பொருளாளர் சத்திய நாராயணன் வெளியிட்டார்.
கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) பாலசுப்பிரமணியம், விதை ஆய்வு துணை இயக்குனர் பழனிசாமி, வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) மதுபாலன், விதை சான்று

உதவி இயக்குனர் வெங்கடேசன், வேளாண் அலுவலர் ராஜமாணிக்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர். துணை செயலாளர் பாலன் நன்றி கூறினார்.

**வாழை விவசாயிக்கு தேசிய மைய விருது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,02:54 IST

ஓசூர்: ஓசூர் அடுத்த ஒன்னல்வாடியை சேர்ந்தவர் விவசாயி வெங்கடசாமி (70). இவர் 15 ஏக்கரில் வாழை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார். கடந்த ஆண்டு திசுவளர்ப்பு சாகுபடி முறையில் "ஜி9' புதிய ரக வாழை ரக கன்றுகளை சாகுபடி செய்தார். இதில் 16 முதல் 22 வரை சீப்புகள் கொண்டு வாழை தார்கள் உற்பத்தி செய்துள்ளார். ஒரு வாழை தார் 50 முதல் 75 கிலோ வரை கிடைத்தது. ஒவ்வொரு வாழை பழமும் 12 செ.மீ., உயரம் நீளம் கொண்டதாக உள்ளது. இதன் மூலம் ஏக்கருக்கு செலவு போக 4 லட்ச ரூபாய் லாபம் சம்பாதித்து தமிழகத்தில் அதிகளவு மகசூல் பெற்று சாதனைப்படைத்துள்ளார். இவரை பாராட்டி கடந்த 21ம் தேதி திருச்சி பேதாவூரில் நடந்த வாழை தின விழாவில், தேசிய வாழை ஆராய்ச்சி மையம் இயக்குனர் முஸ்தபா, "சிறந்த வாழை விவசாயி' விருது வழங்கினார்.

**கி.கிரி., வேளாண் முன்னோடி திட்டம்கர்நாடகா அரசு அலுவலர்கள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:08 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிர் மதிப்பீட்டாய்வு முன்னோடி வேளாண்மை திட்டத்தை கர்நாடக மாநில அலுவலர்கள் குழு ஆய்வு செய்தனர்.கர்நாடகா மாநில புள்ளியல் துறை இணை இயக்குனர் நாராயணசாமி, துணை இயக்குனர் முனிராஜ், உதவி புள்ளி இயல் அலுவலர் பிரபாகரன்,வேளாண்மை இணை இயக்குனர் கொன்னூர்,வேளாண் அலுவலர் தனஞ்செயன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் நாகராஜ் ஆகியோர் கொண்ட குழுவினர் ஆய்வில் கலந்து கொண்டனர்.சேலம் மண்டல புள்ளியியல் துறை துணை இயக்குனர் கமலக்கண்ணன், தமிழகத்தில் செயல்படும் பயிர் மதிப்பீட்டு ஆய்வு, தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் செயல்படுத்தப்படும் பயிர் பரப்பு, உற்பத்தி, சராசரி விளைச்சல் உள்ளிட்ட புள்ளி விவரங்கள் கர்நாடகா மாநில அலுவலர்களுக்கு விளக்கி கூறினார்.செம்மை நெல் சாகுபடி மூலமாக அதிக விளைச்சல் பெறுவதையும், தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நஷ்ட ஈடு வழங்குவதையும், தோட்டக்கலை துறை சம்மந்தம்மான திட்ட விவரங்களையும் வேளாண்மை

இணை இயக்குனர் ராஜன், தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜோசப் ஆகியோர் விளக்கி கூறினர்.ஆர்.டி.ஓ.,வின் நேர்முக உதவியாளர் லட்சுமிநாராயணன், மாதந்தோறும் பிர்கா அளவில், வட்ட அளவில், மாவட்ட அளவில் பயிர் சாகுபடி விவரங்கள் சம்மந்தமான கூட்டம் நடப்பதையும், அடங்கல் மற்றும் இதர கிராம பதிவேடுகள் பராமரிக்கப்படுவதையும் விளக்கி கூறினார்.அப்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புள்ளியில் துறை, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வருவாய் துறை ஆகியோர் இணைந்து செயல்படுவதையும், விளைச்சல் விவரங்கள், புள்ளியல் துறையில் மத்திய மாநில அரசின் நெறிமுறை வழிகாட்டுதலின் படி மிக துல்லியமாக கணக்கிடப்படுவதையும் கர்நாடகா மாநில அலுவலர்கள் பாராட்டினர்.

**அதிக மகசூல் எடுக்க மேலுரம்: வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:05 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு காரீப் பருவ பயிர்களுக்கு விவசாயிகள் குருணை வடிவ யூரியா மேலுரமாக போட்டால், அதிக மகசூல் கிடைக்கும்' என, வேளான் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் காரீப் பருவத்தில் மானாவாரி பயிர்கள் விதைக்கப்பட்டு தற்போது மேலுரம் இடும் நிலையில் உள்ளது. சம்பா நெல் சாகுபடியிலும் நடவு செய்யப்பட்டு முதல் மேலுரம் இடும் நிலையில் உள்ளது. அனைத்து பயிர்களுக்கும் யூரியா மற்றும் பொட்டாஷ் ஆகிய உரங்கள் மேலுரமாக இட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலுரங்களில் தழைச்சத்து உரத்தினை ஈடு செய்ய யூரியா தற்போது குருணை வடிவத்திலும் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும் போது பயிர்கள் பச்சை பிடிப்பது சிறிது தாமதம் ஆவதால், பல விவசாயிகள் சாதாரண யூரியவை அதிக அளவில் இட விரும்புகின்றனர். ஆனால், குருணை வடிவ யூரியாவில் தான் அதிக பலன்கள் உள்ளது.பொதுவாக இரு வகையான யூரியாவிலும் 46 சதம் தழைச்சத்து உள்ளது. குருணை வடிவ யூரியாவில் தழைச்சத்து நீண்ட நாளுக்கு பயிர்களுக்கு கிடைப்பதால் பயிர்கள் பசுமை மாறாமல் இருக்கும். சாதாரண யூரியாவை பயிர்களுக்கு இடும்போது உடனடியாக கரைவதாலும், அதில் உள்ள தழைச்சத்து நீரின் மூலமாக ஆவியாவதாலும், பயிர்கள் பச்சை தன்மையை இழக்கிறது.

குருணை வடிவ யூரியாவை இடும்போது, அதில் உள்ள தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு நேரடியாக கிடைக்கிறது.குருணை வடிவ யூரியா கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் தற்போது விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகள் குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இட்டு அதிக அளவில் விளைச்சல் பெற கேட்டு கொள்கிறோம்.

மழையால் மாவுப்பூச்சி அழிவு; தப்பியது மரவள்ளிக்கிழங்கு

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2010,03:20 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பரவலாக பெய்யும் மழையால் மாவுப் பூச்சி தாக்குதல் குறைந்து, மரவள்ளிக்கிழங்கு பயிர் தப்பியுள்ளது.

தமிழகத்தில் ஏழு லட்சம் ஏக்கருக்கு மேல் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 55 சதவீதம் மரவள்ளிக்கிழங்கு தமிழகத்தில் பயிராகிறது. கேரளாவில் 35 சதவீதம் பயிராகிறது. தமிழகத்தில் 800க்கும் மேற்பட்ட ஜவ்வரிசி ஆலைகள் உள்ளன. எல்லா மாவட்டத்திலும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி நடக்கிறது. குறிப்பாக ஈரோடு, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது.

பெருந்துறை பகுதி விவசாயிகள் கூறியதாவது:வறட்சியை தாங்கி வளரக்கூடிய பயிர் மரவள்ளிக்கிழங்கு. மானாவாரி, இறவையிலும் பயிரிடப்படுகிறது. மரவள்ளியின் வேர்தான் கிழங்குகளாகின்றன. செம்மண் கலந்த மணற்பாங்கான இடத்தில் அதிகம் விளைகிறது. நீர் அதிகளவு தேங்கினால் மரவள்ளிக்கிழங்கு அழுகிவிடும். தென் மேற்கு பருவ மழையை பொறுத்து மே, ஜூன், ஜூலை மாதத்தில் மானாவாரியில் மரவள்ளிக்கிழங்கு நடவு செய்யப்படுகிறது.கோ-1, கோ-2, கோ-3, முள்ளுவாடி-1 ரகம் ஆகியவை மரவள்ளி ஆராய்ச்சி பண்ணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மத்திய கிழங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஹெச்-97, ஹெச்-165, ஹெச்-226, ஸ்ரீசாகியா, விசாகம், பிரகாஷ் போன்ற கலப்பின ரகங்களும் உள்ளன. பொதுவாக தமிழகத்தில் கோ-1, எச்-226 ரகங்கள்தான் அதிகளவு பயிரிடப்படுகின்றன.இவ்வாறு அவர்கள் கூறினர்.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லசாமி கூறியதாவது: மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் போது, ஊடு பயிராக எள், நிலக்கடலை, உளுந்து, பாசிபயறு போன்றவைகளை பயிரிடலாம். வெள்ளோடு, சென்னிமலை, வாய்க்கால்மேடு, சின்னியம்பாளையம், அறச்சலூர், அவல் பூந்துறை,  உள்பட பல இடங்களில் மரவள்ளி பயிராகியுள்ளது. சென்றாண்டை விட ஈரோடு மாவட்டத்தில் அதிக பரப்பளவில் மரவள்ளிக்கிழங்கை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மரவள்ளிக்கிழங்கு விலை மூன்று மாதமாக அதிகரித்து வருகிறது.ஒரு வாரமாக மழை பெய்து வருவதால், மாவுப் பூச்சிகளின் தாக்குதல் குறைந்து விட்டது. இதனால், மரவள்ளிக்கிழங்கு பயிரும் தப்பியுள்ளது. கிழங்குக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**இனி தேங்காய் விலை உயர வாய்ப்பு வேளாண் துணை இயக்குனர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,04:02 IST

ஈரோடு: "வரும் காலங்களில் தேங்காய் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் திட்டமிட்டு தேய்காய் அறுவடை செய்ய வேண்டும்,' என வேளாண்மை துணை இயக்குனர் பரமசிவம் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியுள்ளதாவது:உலகின் 93 நாடுகளில் வளரும் தென்னையின் மொத்த உற்பத்தி ஆண்டுக்கு 57.94 பில்லியன் காய்கள். இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் மொத்தம் உற்பத்தியில் நான்கில் மூன்று பங்கு வகிக்கின்றன. 48 சதவீதம் சமையலில் நேரடி நுகர்வுக்கும், 35 சதவீதம் தேங்காய் எண்ணெய்க்காகவும்,11 சதவீதம் இளநீருக்காகவும் மீதமுள்ள ஆறு சதவீதம் பல்வேறு வகை சமூக மற்றும் கலாச்சார பயன்பாடுகளுக்காக பயன்படுகிறது.

ஆசிய பசிபிக் தேங்காய் குழுமத்தின் கணக்கீட்டின்படி உற்பத்தி திறனில் இந்தியா ஹெக்டேருக்கு 8,165 தேங்காய் உற்பத்தியாகி முதலிடத்தை பெற்றுள்ளது. மொத்த தேங்காய் உற்பத்தியில் 20 சதவீத பங்கு வகிக்கிறது. இந்திய பொருளாதாரத்தில் 7,000 கோடி ரூபாய் அளவுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியையும், 250 கோடி ரூபாய் அளவுக்கு அந்நிய செலாவணியையும் ஈட்டித் தருகிறது.

இந்திய அளவில் கேரளாவில் 0.87 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும், கர்நாடகாவில் 0.40 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும், தமிழகத்தில் 0.37 மில்லியன் ஹெக்டேர் பரப்பிலும் தென்னை பயிரிடப்படுகிறது. தென்னை சாகுபடி பரப்பு தமிழகத்தில் குறைவாக உள்ள போதிலும் உற்பத்தி திறன் (ஒரு ஹெக்டேருக்கு 14 ஆயிரத்து 495 தேங்காய்) காரணமாக, இந்திய அளவில் தேங்காய் உற்பத்தியில் 34 சதவீதம் தமிழகம் கொண்டுள்ளது. கோவை, தஞ்சாவூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி, நெல்லை, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 80 சதவீதம் பங்கு அளிக்கிறது.

எதிர் வரும் காலங்களில் தேங்காய் விலை உயருமா? என்பது குறித்து, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பொள்ளாச்சி சந்தையில் பத்து ஆண்டுகளாக நிலவிய விலையை ஆய்வு செய்தது. ஆய்வின் படி இந்தியா 6.6 லட்சம் கொப்பரையையும், 4.3 லட்சம் டன் தேங்காய் எண்ணெயையும் உற்பத்தி செய்யும் என்று கணக்கீடு செய்துள்ளது. சென்றாண்டை விட 1.5 சதவீத அளவு இது அதிகமாக இருக்கும்.தரம் மற்றும் எண்ணெய் பிழிதிறன் அதிகமாக உள்ளதால்

பொள்ளாச்சி பகுதியில் விளையும் தேங்காய் அதிக விலை பெறுகிறது. தேங்காயில் இருந்து 17 சதவீத அளவு கொப்பரை, கொப்பரையில் இருந்து 60 சதவீதம் எண்ணெய் கிடைக்கிறது.

வர்த்தக மூலங்களின் படி ஃபிப்ரவரி முதல் ஜூன் வரை தேங்காய் வரத்து அதிகமாகவும், ஜூலை முதல் டிசம்பர் வரை வரத்து குறைவாகவும் இருக்கும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின் ஆய்வு முடிவுகளின் படி தேங்காய் விலை ஜூலை மாத்ததுக்கு பிறகு அதிகரிக்க துவங்கும். எதிர்வரும் பண்டிகை காலத் தேவைக்கு பீஹார், உத்திரபிரதேசம், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் உள்ள வர்த்தகர்கள் அதிகளவு கொள்முதல் செய்வர்.

ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் 5 முதல் 5.50 ரூபாயாகவும், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் 5.5 ரூபாய் முதல் 6 ரூபாயாகவும் இருக்கும் என ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. தமிழகத்தில் இதர சந்தைகளில் விலை சற்று குறைவாகவே இருக்கும். விவசாயிகள் விலையை கருத்தில் கொண்டு தேங்காய் அறுவடையை திட்டமிட வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**இந்தியாவின் முகவரி விவசாயம்;விஞ்ஞானி பொன்ராஜ் பேச்சு**பதிவு செய்த நாள் : ஆகஸ்ட்

25,2010,02:03 IST

கோவை: ""எந்த நாடு தன் முகவரிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுகிறதோ அந்நாடே முன்னேறும், இந்தியாவின் முகவரி விவசாயம்,'' என பல்கலை விருது வழங்கும் விழாவில், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் ஆலோசகர் விஞ்ஞானி பொன்ராஜ் பேசினார். தமிழ்நாடு வேளாண் பல்கலை விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கும் விழா பல்கலையில் நேற்று நடந்தது. பல்கலை ஆராய்ச்சி மைய இயக்குனர் பரமாத்மா வரவேற்றார். துணைவேந்தர் முருகேச பூபதி தலைமை வகித்தார். முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் ஆலோசகர் விஞ்ஞானி பொன்ராஜ் பேசியதாவது: ஒவ்வொருவரும் தங்களால் என்ன சாதிக்க முடியும் என்பதை உணர்ந்து அதன்படி செயல்பட்டால் அனைவரும் சாதனையாளர்களாக முடியும். சர்க்கரை உற்பத்தியில் பூனே, மகாராஷ்ட்ரா, பீகார் மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன. இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழகம் சர்க்கரை உற்பத்தியில் முன்னேற்றம் அடைத்துள்ளது.

நாட்டில் வேளாண்துறையில் தங்களுக்கு தேவையான விதை பொருட்களை விவசாயிகளே உற்பத்தி செய்து பயிரிடும் முறைக்கான முயற்சி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் அமல்படுத்தப்பட்டால் சர்வதேச அளவில் இத்திட்டத்தை அமல்படுத்திய முதல் நாடாக இந்தியா

திகழும். பின்லாந்து நாட்டின் பொருளாதாரம் ரஷ்யாவை நம்பியிருந்த நிலையில் ரஷ்யா பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்த போது பின்லாந்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அந்நாட்டின் பிரதமர் தலைமையில் நடந்த உயர்மட்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், வயர்லெஸ் கருவி மூலம் மேற்கொள்ளப்படும் ஆடியோ டெக்னாலஜியை மொபைல் போனில் பயன்படுத்த தீர்மானித்தனர். இம்முறையை மேற்கொண்ட நிறுவனம் இன்று சர்வதேச அளவில் மொபைல்போன் தயாரிப்பில் முன்னணியிலுள்ள "நோக்கியா' என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாட்டின் மொத்த வருவாயில் இன்று வரை அந்நிறுவனம் 6 சதவீத பங்களிப்பு அளித்து வருகிறது. மாற்று சிந்தனையால் புரட்சி ஏற்படுத்த முடியும் என்பதற்கு இது ஒரு உதாரணம். இந்தியாவில் பெருமளவில் மக்கள் ஐ.டி., துறையில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இதில் 90 சதவீதத்தினர் வெறும் காப்பி,பேஸ்ட் மற்றும் கோடிங் என சொல்லகூடிய வேலையில் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். கம்ப்யூட்டர், சி. சி++, ஜாவா உள்பட ஐ.டி.,துறையில் பயன்படுத்தப்படும் சாப்ட்வேர் மற்றும் ஹார்டுவேர் அனைத்தும் வெளிநாட்டினர் கண்டுபிடித்துள்ளதே காரணம். நம் நாட்டில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அதிகளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

நாட்டின் பொருளாதாரத்தில் விவசாயத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. எந்த நாடு தன் முகவரிக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுகிறதோ அந்நாடே முன்னேறும். இந்தியாவின் முகவரி விவசாயம். நாட்டின் கிராமப்புற வளர்ச்சிக்கு இந்தாண்டு முதல் 16,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. 60 சதவீதத்துக்கும் மேல் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் ஒட்டுமொத்த வருவாயில் 17 சதவீதம் விவசாய பங்களிப்பு உள்ளது. வேளாண் உற்பத்தி இன்று போதிய நிலையில் இருந்தாலும் விளை நிலங்கள், உணவு பொருட்களின் தர குறைவு உள்ளிட்டவை காணப்படுகிறது. வரும் ஆண்டுகளில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு பொருட்களின் தேவையும் அதிகரிக்கும்; வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலை உருவாகும். இதை தவிர்க் கும் நடவடிக்கையை இந்திய அரசு இப்போதே மேற்கொண் டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. விவசாயத்துறையில் குஜராத் மாநிலம் முன்னிலை வகிக்கிறது. அங்கு 20 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் ஒவ்வொரு விலை நிலங்களிலும் நீர் தேக்கம் அமைக்கப்பட்டு, நர்மதா நதியுடன் இணைக்கப்பட்டது. வேளாண்துறை, வீட்டு பயன்பாடு, தொழில்துறை என அனைத்துக்கும் 24 மணி நேர தடையில்லா 3 பேஸ் மின்சாரம் வழங்கப்பட்டது.

மின் திருட்டை கட்டுப்படுத்த முன்னாள் ராணுவத்தினர் 5,000 ரூபாய் சம்பளத்தில் பணியமர்த்தப்பட்டனர். பருவ காலம் துவங்கும் முன் முதல் வேளாண் உற்பத்தி பொருட்கள் அறுவடை வரை விவசாயிகளுடன் வேளாண் அதிகாரிகள் தங்கி உதவினர். மாநில வருவாயில் 40 சதவீதம் வேளாண்துறை பங்களிப்பு அதிகரித்தது. வேளாண் பொருட்கள் அதிகளவில் கிடைத்தவுடன் அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அரசு வழிவகை செய்து

கொடுத்தது. தமிழகத்திலும் இத்தகைய புரட்சி ஏற்படுத்த வேண்டியது அவசியம். அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டால் இதை சாதிக்க முடியும். 2050ல் தற்போது சர்வதேச அளவில் முன்னணி நாடாக உள்ள அமெரிக்காவை ஒதுக்கிவிட்டு இந்தியா, பிரேசில், ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் வல்லரசு நாடுகளின் பட்டியலில் முதல் நான்கு இடத்தை பிடிக்கும். நாட்டில் 30 சதவீதத்துக்கு மேற்பட்டோர் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் நிலையில் சர்வதேச அளவில் அதிக பணக்காரர்கள் உள்ள நாடாக இந்தியா உள்ளது குறிப்பிடத்தக்கது. விவசாய நிலங்கள் பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களால் ஒட்டுமொத்தமாக வாங்கப்படுகிறது. இந்நிலை நீடித்தால் விவசாய நிலங்கள் குறைந்து வேளாண் பொருட்கள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும்.

வியாதி வராமல் இருக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை பற்றி சிந்திக்காமல் என்ன வியாதிக்கு என்ன மருத்துவ முறை மருந்துகளை பயன்படுத்தலாம் என்பதில் மட்டுமே நாம் அனைவரும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். இவ்வாறு, விஞ்ஞானி பொன்ராஜ் பேசினார். தொடர்ந்து, வேளாண் பல்கலையில் சாதித்த 235 விஞ்ஞானிகளுக்கு விருது வழங்கினார். வேளாண் பல்கலை குழு உறுப்பினர்கள் அன்பு, சோமசுந்தரம், பதிவாளர் சுப்பையன் உள்பட பலர் பங்கேற்றனர். வேளாண் பல்கலையின் கீழ் செயல்படும் ஆடுதுறை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் நன்றி கூறினார்.

**ஆனைமலை, நெகமத்தில் கொப்பரை ஏலம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,02:08 IST

பொள்ளாச்சி: ஆனைமலை ஒழுங்குமுறை  விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 36.65 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 52 பேர் 160 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை ஐந்து வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 119 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 34.50 ரூபாய் முதல் அதிகபட்சமாக 36.65 ரூபாய் வரை விலை கிடைத்தது.  இரண்டாம் தர கொப்பரை 41 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 27.25 ரூபாய் முதல் அதிகபட்சமாக 32.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை ஏலத்திற்கு கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது கொப்பரை வரத்து அதே நிலையில் உள்ளது. வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி நிலவுவதால் விலை உயர்ந்து வருகிறது.  முதல் தர கொப்பரை கிலோவுக்கு 55 பைசாவும்,

இரண்டாம் தர கொப்பரை கிலோவுக்கு 35 பைசாவும் விலை உயர்ந் துள்ளது. ஓணம் பண்டிகை முடிந்து விட்டதால் அடுத்த வாரம் முதல் மேலும் விலை உயரும்' என்றனர். நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 36.15 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 8 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 25 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் மூன்று வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 9 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 35.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 36.15 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 16 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 23.25 ரூபாய் முதல், அதிகபட்சம் 33.25 ரூபாய் வரை விலை கிடைத்தது.

**வாடகைக்கு நவீன இயந்திரங்கள் கிடைக்காமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 22,2010,22:01 IST

பொங்கலூர் : விவசாய பணிக்கு நவீன இயந்திரங்கள் வாடகைக்கு கிடைக்காமல், விவசாயிகள் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.
விவசாய வேலைகளுக்கு ஆட்கள் தட்டுப் பாடு அதிகரித்து வருகிறது. 100 நாள் வேலை திட்டம், பனியன் கம்பெனிகள் வீட்டுக்கே வந்து, பஸ்சில் வேலைக்கு ஆட் களை இலவசமாக அழைத்து செல்தல், இளைஞர்கள் இடையே ஏற் பட்டிருக்கும் நகர்ப்புற மோகத்தால், விவசாயத்தை விரும்பாமை போன்ற காரணங்களால், நடவு மற்றும் அறுவடை சமயங்களில், விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.
நவீன இயந்திரங்களின் உதவி இல்லாமல், விவசாயம் செழிக்க வழி இல்லை என்ற நிலையே காணப்படுகிறது. விவசாயிகள், நவீன இயந்திரங்களை விலை கொடு த்து வாங்கும் திறனற்றவர்களாக, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கி இருக்கின்றனர். வாழை, பப்பாளி, எலுமிச்சை போன்ற மரங்கள் நடுவதற்கு குழி தோண்டும் இயந்திரம், சோளம், மக்காச்சோளம், கம்பு, நரிப்பயறு, மசால் போன்ற மாட்டுத் தீவனப்பயிர்களை அறுவடை செய்யும் இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம் தனியாரிடமோ, வேளாண் துறையிடமோ வாடகைக்கு கிடைப்பதில்லை.
போதிய இயந்திரங்கள் வாடகைக்கு கிடைக்காமல், விவசாய பணிகளை உரிய நேரத்தில் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. காலங்கடந்து செய்வதால், தண்ணீர் பற்றாக் குறை, பருவம் தவறுவதால் விளைச்சல் பாதிப்பு, பூச்சித் தாக்குதல் அதிகரிப்பு, காலங்கடந்து அறுவடை

செய்வதால் ஏற்படும் சேதம் போன்ற பிரச் னைகளை விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால், செலவு அதிகரித்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

விவசாய நிலங்கள் சுருங்கி வருவதாலும், விளைச்சல் பாதிக்கப்படுவதாலும் உணவு உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் விலைவாசி உயர்வு, மக்களை வாட்டி வருகிறது. இச் சூழ்நிலையில் விவசாய பணியை முற்றிலும் நவீனமயமாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொரு பாசன சபை மூலமும் அறுவடை இயந்திரம், குழி தோண்டும் இயந்திரம், களையெடுக்கும் கருவி வாங்கி, விவசாயிகளுக்கு வேளாண் துறை வாடகைக்கு விட வேண்டும் என்பது பெரும்பாலான விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**காளான் உற்பத்தி - விவசாயியின் அனுபவம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:00 IST



காளான் உற்பத்தி செய்வது என்பது ஒரு கடினமான வேலையில்லை. காளான் உற்பத்தி செய்ய ஓரளவுக்கு படித்திருந்தாலே போதும். வருடம் முழுவதும் உற்பத்தி செய்யலாம். ஆனால் கோடை காலத்தில் 30 -40% மகசூல் குறைவாக கிடைக்கும்.

சிப்பிக்காளான் கடல் சிப்பியின் தோற்றமுடையதாய் இருப்பதால்தான் இவற்றுக்கு இந்த பெயர் வந்தது. பொதுவாக சிப்பிக் காளானில் வைட்டமின் பீ அதிகமாக இருப்பதால் இதயம் சம்பந்தமான நோய்களை குணப்படுத்துகிறது. வைட்டமின் பீ-ல் உள்ள போலிக் ஆசிட் அதில் இருப்பதால் ரத்தசோகை நோய்க்கு நல்லது. நார்ச்சத்து உள்ளதால் நாம் உண்ணும் உணவுகள் நன்றாக செரிமானம் அடைய நிவாரணியாக செயல்படுகிறது. வயிற்றுப்புண்களை குணப்படுத்துகிறது. வயோதிகப்பருவத்தில் ஏற்படும் கால் மூட்டுவலிகளை மிக அற்புதமாக சிப்பிக்காளான் குணப்படுத்துகிறது. சிறந்த கண்பார்வைக்கும் எலும்புகளின் வளர்ச்சிக்கும் பற்களின் உறுதிக்கும் தேவையான தாமிர, இரும்பு சத்துகளுடன் கூடிய கால்சியம், பாஸ்பரஸ்,

பொட்டாசியம் போன்ற தாதுக்களும் காளானில் உள்ளன. ஒரு மனித உடலுக்கு எவை எவை எநத எந்த அளவுக்கு தேவைப்படுமோ அந்த அளவிற்கு சத்துப் பொருட்கள் சிப்பிக்காளானில் உள்ளது. எனவே சிப்பிக்காளான் ஒரு முழுமையான உணவாகும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிப்பிக்காளானை வாரம் இருமுறை உணவில் சேர்த்து உண்ணலாம். சிப்பிக்காளானை அடிக்கடி உணவில் சேர்த்து உண்பதால் வயோதிகப்பருவத்தை தள்ளிப்போடுகிறது. இளமையை அள்ளித்தருகிறது.

**வைக்கோல் தயாரிப்பு:** காளான் வளர்ப்பதற்கு நெல் வைக்கோலைக் கொண்டு உருளை படுக்கைகள் தயாரிக்க வேண்டும். புதிய நெல் வைக்கோலை 5 செ.மீ. நீளத்திற்கு வெட்டி, 4-5 மணி வரை நீரில் ஊறவைக்க வேண்டும். பிறகு வைக்கோலை நன்கு கொதிக்கும் நீரில் ஒரு மணிநேரம் வேகவிட வேண்டும். பின் வைக்கோலை அகற்றி உலர்த்திக் கொள்ள வேண்டும்.

**காளான் படுக்கை தயாரித்தல்:** 2க்கு 1 அடி அளவுக்கு 80 காஜ் கனமுள்ள பாலிதீன் பைகளில் அடுக்கு முறையில் காளான் விதையிடப்பட்ட படுக்கைகள் தயாரிக்கப் படுகிறது. பாலிதீன் பையின் அடிப்பகுதியை சணலால் கட்டி அதை உள்பக்கமாக திருப்பிவிட வேண்டும். பையின் அடிப்பகுதியில் 5 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் துண்டுகளை பரப்பி அதன் மேல் 30 கிராம் காளான் வித்தை தூவ வேண்டும். இதே போல் 4 அடுக்குகள் தயாரித்து மேல்பகுதியில் 5 எச்.மீ. வைக்கோல் பரப்பி, பையின் வாய்பகுதியை சணலால் இறுக்க கட்டவேண்டும். பாலிதீன் மையப்பகுதியில் பென்சில் அளவுள்ள 5-10 துளைகள் போடவேண்டும்.

காளான் வித்து பரவும் முறை: மேற்கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட உருளைப் படுக்கைகளை வயரில் கட்டி தொங்கவிட வேண்டும். படுக்கையில் பூசண விதைகள் பரவுவதற்கு 15 நாட்கள்ஆகும். பின் படுக்கைகளைக் காளான் தோன்றும் அறைக்கு மாற்ற வேண்டும்.

**காளான் அறை:** காளான் பூசணம் முழுமையாக பரவி ஒரு வாரத்திற்குள் பையைக் கிழித்துக்கொண்டு வெளியே வரும். காளான் மொட்டு தோன்றிய மூன்று நாட்களில் பெரியதாகிவிடும். அவற்றை அறுவடை செய்த பின் பாலிதீன் பையை நீக்கிவிட வேண்டும். அறையின் வெப்பநிலை, ஈரப்பதத்தை தேவையான அளவு பராமரிக்க மணலில் தண்ணீர் தெளிக்கவும்.

**காளான் அறுவடை**: காளான்களை அறுவடை செய்தபின் படுக்கைகள் மீது தண்ணீர் தெளிக்க வேண்டும். ஒரு வார இடைவெளியில் மீண்டும் காளான் அறுவடைக்கு வரும். இதுபோல் 3 முறை அறுவடை செய்யலாம். ஒரு படுக்கை தயார் செய்ய 500 கிராம் வைக்கோல் பயன்படுத்தினால் 900 கிராம் மகசூல் கிடைக்கும். மேற்கூறிய முறையில் காளான் வளர்ப்பு செய்து அதிக மகசூல் பெற்று விவசாயிகள் பயனடையலாம்.

**தொடர்புக்கு: பாண்டியன், அகல்யா பார்ம்ஸ், 92832 52096. -கே.சத்தியபிரபா, 96591 08780.**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:00 IST



**வேளாண் விளைபொருட்கள் இருப்பு வைத்தல்:** கட்டுப்படுத்தப்பட்ட வளிமண்டல சூழலில் இருப்பு வைத்தல்: இயல்பான வளிமண்டல சூழ்நிலையை செயற்கையாக மாற்றி அதைக்கட்டுப்படுத்தி பராமரிப்பதன் மூலம் வேளாண் விளைபொருட்களை உணவு தானியங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றை அதிக நாட்கள் தரம் குறையாமல் பாதுகாக்கலாம். இயல்பான வளிமண்டல சூழ்நிலையில் காற்றில் 78.09 சதம் நைட்ரஜன், 20.95 சதம் ஆக்சிஜன், 8.03 சதம் கார்பன்டை ஆக்சைடு, 0.93 சதம் ஆர்கான் காணப் படுகின்றன. செயற்கை முறையில் காற்றில் அடங்கியுள்ள வாயுக்களின் விகிதத்தை மாற்றி அமைப்பதால், அதாவது அதிக கார்பன்டை ஆக்சைடு செலுத்தியோ அல்லது குறைவான ஆக்சிஜன் மண்டலத்தை உருவாக்கியோ வாயுக்களின் அளவு மாற்றப்படுகிறது. இந்தச் சூழலில் பூச்சிகளும் நோய்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதிக கார்பன்டை ஆக்சைடு சூழ்நிலையில் பூச்சிகள் சுவாசிக்க இயலாமல் இறந்துபோகின்றன.

கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையானது இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் தேவைப்படும் வாயு விகிதம் கொண்ட கட்டுப்படுத்தப் பட்ட சூழ்நிலை சேமிப்பு கிடங்கு/ இருப்பு வைக்கும் கிடங்கினுள் உருவாக்கப்படுகிறது. இரண்டாவது பகுதியில் முதல் பகுதியில் உருவாக்கப்பட்ட வாயு விகிதமானது தேவைப்படும் வரை ஒரே சீராக கட்டுப்பாட்டுக்குள் பராமரிக்கப்படுகிறது. இந்த இருப்புவைத்தல் முறையில் அடிக்கடி வாயுக்களின் விகிதத்தை சோதனை செய்து காற்றோட்டத்தை கட்டுப் படுத்தவோ அல்லது கார்பன் டை ஆக்சைடின் அளவைக் குறைக்கவோ வேண்டும். புதிதாக அறுவடை செய்யப்பட்ட பழங்களும் காய்கறிகளும் உயிரோட்டமான சூழ்நிலையில் வைத்திருத்தல் அவசியம். அப்போதுதான் அவை பதப்படுத்தப்படுவதற்கும் உண்பதற்கும் ஏற்ற வகையில் இருக்கும். பழங்கள், காய்கறிகளை

பறித்த பின்னும் அவை சுவாசிக்கின்றன. அவற்றின் சுவாசிக்கும் அளவைக் குறைப்பதன் மூலம் அவற்றிலுள்ள சர்க்கரை மற்றும் கார்போஹைட்ரேட் குறைவதைத் தடுக்க முடியும். எனவே மேற்கண்ட கூற்றுகளின் படி கட்டுப்படுத்தப் பட்ட சூழ்நிலையில் உணவுப்பொருட்களைச் சேமிப்பது வேதிப் பொருளற்ற சேமிப்பு முறையாகும். இந்த இருப்புவைத்தல் முறையின் மூலம் உள்ளூர் தேவைகளுக்கான உணவின் அளவை அதிகரிப்பதோடு உணவுப் பொருட்களின் ஏற்றுமதியையும் அதிகப்படுத்த இயலும். **(தகவல்: த.ஆறுமுகநாதன், இந்துராணி, தேசிய காளான் ஆராய்ச்சி நிலையம், சோலன்; விரிவாக்க கல்வி இயக்ககம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).**

**நவீன முறையில் கன்றுகள் பராமரிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:00 IST



**பிறந்த கன்றுகள் பராமரிப்பு:** கன்று பிறந்ததும் நாசிப்பகுதியில் ஒட்டியிருக்கும் சளி போன்ற திரவத்தை சுத்தமான துணியால் துடைத்து, சுவாசிப்பதற்கு உதவ வேண்டும். கன்றின் தொப்புள் கொடியை 3 செ.மீ. நீளம் விட்டு முடிச்சுப் போட்டு, முடிச்சிற்குக் கீழ் சுத்தமான புது கத்திரியால் வெட்டிவிட வேண்டும். பிறகு அந்தப்பகுதியில் டிங்சர் அயோடின் தடவ வேண்டும். கன்று பிறந்தவுடன் மூச்சுத் திணறினால் விலாப்புறத்தினை அழுத்திவிட வேண்டும் அல்லது குளிர்ந்த தண்ணீரை கன்றின் மேல் தெளிக்க வேண்டும். பிறந்த கன்றினை தாய்ப்பசுவைக் கொண்டு நக்கவிட வேண்டும். தாய்ப்பசு, கன்றை நக்கும் உணர்வுடன் இல்லாவிடில் சிறிதளவு உப்புத் தண்ணீரைக் கன்றின் மேல் தெளித்துப் பின் தாய்ப்பசுவை நக்கவிட வேண்டும். நல்ல திடமுள்ள கன்று பிறந்த அரை மணி நேரத்தில் எழுந்து நிற்கும். அப்படி எழுந்த நிற்க கஷ்டப்பட்டால் நாம்

உதவி செய்ய வேண்டும். குளம்பின் நுனியில் ஜவ்வுப் பாகத்தைக் கிள்ளி அகற்றிவிட்டால் கன்று சிரமமில்லாமல் நிற்கும். கன்று பிறந்தவுடன் பசுவிடமிருந்து பிரித்து வளர்க்க வேண்டும். இப்படி பிரித்து வளர்ப்பதால் பசுவின் பால் உற்பத்தியைக் கணக்கிட முடியும். மேலும் பிறந்தவுடன் கன்று இறந்துவிட்டால் பசுவின் பால் உற்பத்தி குறையாமல் சுத்தமான பாலை துரிதமாகப் பெறலாம். கன்றுகளைத் தாய்ப்பசுவிடமிருந்து பிரித்து வளர்த்தாலும் முதல் உணவாகச் சீம்பால்தான் கொடுக்க வேண்டும். (பிறந்த அரை மணி நேரத்திற்குள்) சீம்பாலைக் குடிப்பதால் கன்றுகள் நோய் எதிர்ப்பு சக்தி பெறுவதுடன் அவற்றிற்கு நல்ல மலமிளக்கியாகவும் விளங்குகிறது. கன்றுகளைத் தனியாகப் பிரித்து வளர்ப்பதால், அவற்றிற்குப் பால் தேவையான அளவு, குறிப்பிட்ட இடைவெளியில் கொடுக்க வேண்டும்.

ஒரு கன்றின் உடல் எடையில் 10 சதவீதம் பாலை 15 நாட்கள் கொடுக்க வேண்டும். வயிற்றுப்போக்கோ கழிச்சலோ ஏற்பட்டால் பாலின் அளவை கணிசமாகக் குறைக்க வேண்டும். கன்றுகள் பால் குடித்தவுடன் அவற்றின் நாக்கில் சிறிதளவு உப்பைத் தடவ வேண்டும். இதனால் இளம் கன்றுகள் ஒன்றை ஒன்று நக்கும் பழக்கம் நின்று, உரோமம் வயிற்றுக்குள் செல்லாமல் தடுக்கலாம். தாயிடமிருந்து பிரிந்து வளரும் கன்றுகளுக்கு முதல் 5 வாரங்களுக்கு பால் மிகவும் அவசியம். 5 வாரங்களுக்கு மேல் பாலுக்குப் பதிலாக வெண்ணெய் நீக்கப்பட்ட மோரினைக் கொடுக்கலாம். கன்றுகளுக்கு ஆரம்பகால கலப்புத் தீவனமும், இளம்பசும்புல்லும் இரண்டாவது வார முடிவிலிருந்து கொடுக்கலாம். கன்றுகளுக்கு தொழுவம் வசதியாகவும், வெளிச்சமாகவும், காற்றோட்டம் உள்ளதாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு கன்றுக்கும் 10 ச.அடி இடம் தேவை. கன்றுகள் தொழுவத்தில் ஓடித்திரிய 30 ச. அடி இடம் தேவை. தொழுவத்தின் தரை மற்றும் சுவர்களை 3 மாதத்திற்கு ஒரு முறை சுண்ணாம்பு வைத்து சுத்தம் செய்ய வேண்டும். தொழுவத்தில் உப்புக் கட்டிகளைக் கட்டி தொங்கவிட வேண்டும். இதன்மூலம் கன்றுகள் தமக்கு வேண்டிய தாது உப்புகளை பெற்றுக்கொள்ளும். கன்றுகளுக்கு 2 மற்றும் 10வது வார வயதில் குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். பின் மாதம் ஒரு முறை குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும். கன்றுகளுக்கு 10-15 நாட்களுக்குள் கொம்பைச்சுட்டுவிட வேண்டும். பொதுவாக ஏற்படும் நோய்களான அடைப்பான், தொண்டை அடைப்பான், சப்பை நோய், கோமாரிநோய், கருச்சிதைவு நோய் போன்றவற்றிற்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி தடுப்பு ஊசிகள் போட்டுக்கொள்ள வேண்டும்.

**அ.செந்தில்குமார் மற்றும் த.அ.விஜயலிங்கம் உழவர் பயிற்சி மையம், தேனி-625 531**.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 25,2010,00:00 IST

**புதிய ரக த.வே.ப.க. கோதுமை கோ.டபிள்யூ.2 :** சமீபத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. இதன் வயது 110 நாட்கள். மகசூல்: 4040 கிலோ/எக்டர். (என்.பி.200 ரகத்தைவிட 26.6 சதம் கூடுதல் மகசூல்). பருவம்: அக்டோபர் மூன்றாம் வாரம் முதல் நவம்பர் இரண்டாம் வாரத்திற்குள். பயிரிட உகந்த மாவட்டங்கள்: கோவை, திருப்பூர், வேலூர், தேனி, திருவண்ணாமலை, திண்டுக்கல், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி. உருவாக்கம்: என்.பி. 200 கதிரியக்க சடுதிமாற்று முறை.
**சிறப்பியல்புகள்:** சரியான மற்றும் காலம் தாழ்த்திய விதைப்பிற்கு ஏற்றது. நடுத்த உயரம், சாயாத தன்மை, உதிராத குணம். கவர்ச்சியான சிவந்த தானியம் (பீட்டா கரோட்டின் 37 பி.பி.எம்). சத்தான தானியம் (புரதம் 13.2 சதவீதம்). கரும்பு, மஞ்சள், பழுப்பு துரு நோய்களுக்கான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**த.வே.ப.க. சோளம் கோ.30:** இந்த புதிய ரகம் த.வே.பல்கலைக் கழகத்திலிருந்து சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் வயது 100-105 நாட்கள். உருவாக்கம்: ஏ.பி.கே.1/டி.என்.எஸ்.291. மகசூல்: மானாவாரியில் 2800 கிலோ/எக்டர், இறவையில் 3360 கிலோ/எக்டர். கோ.எஸ்.28 மற்றும் ஏ.வி.கே.1 ரகங்களைவிட முறையே 20.7 மற்றும் 19.3 சதம் கூடுதல் மகசூல். தீவன விளைச்சல்: மானாவாரியில் 6990 கிலோ/எக்டர். இறவையில் 9290 கிலோ/எக்டர். பருவம்: மானாவாரி - ஆடிப்பட்டம், புரட்டாசிப்பட்டம், இறவையில் - மாசிப்பட்டம். பயிரிட உகந்த மாவட்டங்கள்: நீலகிரி, காவிரி டெல்டா தவிர தமிழகத்தின் சோளம் பயிரிடும் அனைத்து மாவட்டங்கள்.
**சிறப்பியல்புகள்:** தானியம், தீவனத்திற்கு ஏற்றது. அதிக செரிமானத்தன்மை கொண்ட தட்டு. குருத்து ஈ, தண்டு துளைப்பானுக்கு மித எதிர்ப்புத்தன்மை கொண்டது. அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்தன்மை. வெண்முத்து தானியங்கள்.
குறிப்பு: த.வே.பல்கலைக்கழகத்தில் புதிய வெளியீடுகள் பற்றிய விரிவான விவரங்கள், விதை, நாற்றுக்கள் தேவைக்கு தொடர்பு முகவரி:
**இயக்குனர், ஆராய்ச்சி, த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003). -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

தினத் தந்தி DAILY THANTHI

**'ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்தால்தான் விவசாயம் தன்னிறைவு பெறும்' விவசாய விஞ்ஞானி பேச்சு**

*கோவை,ஆக.25–*
*விவசாய ஆராய்ச்சிகளை ஒருங்கிணைத்து அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு சென்றால்தான், விவசாயம் சிறப்பாக அமைந்து தன்னிறைவு அடைய முடியும் என்று விவசாய விஞ்ஞானி வி.பொன்ராஜ் கூறினார்.*
*ஆராய்ச்சியாளர்களுக்கு விருது*
*கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில், வேளாண் ஆராய்ச்சியாளர்களுக்கு விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் ஆலோசகரும், விவசாய விஞ்ஞானியுமான டாக்டர் பொன்ராஜ் இந்த விழாவில் கலந்து கொண்டார். விவசாய பல்கலைக்கழக துணைவேந்தர் பி.முருகேச பூபதி இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். விவசாய ஆராய்ச்சி மைய இயக்குனர் எம்.பரமாத்மா வரவேற்று பேசினார். பல்வேறு பயிர் இனங்கள் மற்றும் விவசாய தொழில் நுட்பங்கள், கருவிகள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த 235 வேளாண் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த விழாவில் விருது வழங்கப்பட்டது.*

*விருதுகளை வழங்கிய விஞ்ஞானி பொன்ராஜ் பேசும்போது கூறியதாவது:–*
*வெளிநாட்டு விவசாயம்*
*முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமுடன் நான் 35–க்கும் மேலான நாடுகளுக்கு பயணம் செய்து, அங்குள்ள விவசாயம் தொடர்பாகவும் பார்வையிட்டுள்ளேன். பிலிப்பைன்ஸ் உள்பட வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் விவசாய தொழில்நுட்பத்தை நாமும் சிறப்பாக பயன்படுத்த வேண்டும். கோவை வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் மூலம்தான் பயோ டீசலுக்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான பயன்பாட்டை அதிகரித்துள்ளது. பின்லாந்து நாட்டு அரசின் ஆராய்ச்சியுடன் நோக்கியா நிறுவனம் செல்போனை உலகுக்கு அறிமுகப்படுத்தி, அந்த நாட்டின் ஒட்டுமொத்த வருவாயில் அந்தநிறுவனம் 6 சதவீத பொருளாதார வளர்ச்சியை கண்டுள்ளது. எனவே முயன்றால் எதையும் சாதிக்கலாம்.*

*சீனா போன்ற நாடுகளும் நவீன தொழில்நுட்பங்களுடன் விவசாய கருவிகளை பயன்படுத்தி வருகிறது. வளம், ஆற்றல் உள்பட எந்த வகையிலும் நமது நாடும் குறைவு இல்லாமல் சிறப்பான வளர்ச்சியை எட்டி வருகிறது.எதிர்காலத்தில் பிரேசில், இந்தியா, ரஷியா, சீனா போன்ற*

நாடுகள்தான் வளர்ச்சி அடைந்த நாடுகளாக மாறும். அமெரிக்கா பின்னுக்கு தள்ளப்படும்.

புதிய தொழில்நுட்பங்கள்

நமது நாட்டில் 60 சதவீத மக்கள் விவசாயத்துறையை நம்பி உள்ளனர். விவசாயத்துறையில் நாம் இன்னும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். நாம் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து இருந்தாலும், சத்து மிகுந்த உணவு பொருட்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். இப்போது 236 மில்லியன் டன்னாக உணவு உற்பத்தி உள்ளது. எதிர்கால தேவை 400 மில்லியன் டன்களாக உயரும். விவசாய உற்பத்திக்கு தேவையான நிலப்பரப்பு குறைவதுடன், தண்ணீர் வளமும் குறைந்து வருகிறது. விவசாயதுறையை மேம்படுத்தாவிட்டால் நாம் வெளிநாடுகளில் கையேந்தும் நிலை ஏற்பட்டு விடும். இதனை உணர்ந்துதான் மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

குஜராத் மாநில அரசு விவசாயிகளை ஒருங்கிணைத்து, சொட்டு நீர்பாசனம், மற்றும் அனைத்து பகுதிகளிலும் சிறிய குட்டைகளை அமைத்து நீர்பாசனம், உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்வதில் சிறப்பான கவனம் ஆகியவற்றின் மூலம் 40 சதவீதம் அளவுக்கு வளர்ச்சியை எட்டி உள்ளது. அந்த மாநிலத்தில் இலவச மின்சாரம் கிடையாது. ஆனால் அனைத்து பகுதிகளுக்கும் 3 பேஸ் மின்சாரம் தடையின்றி வழங்கப்படுவதாலும், மின்திருட்டு மற்றும் மின்விரையத்தை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாலும் அந்த மாநிலம் கூடுதல் முன்னேற்றத்தை அடைந்துள்ளது. தமிழ்நாட்டிலும் இதுபோன்று விவசாயத்துறையில் முன்னேற்றம் அடையச்செய்யலாம். கோவை வேளாண் பல்கலைக்கழக விவசாய ஆராய்ச்சியாளர்களின் ஆராய்ச்சி பலன்களை அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும். இதற்கான ஒருங்கிணைந்த செயல்பாடுகள் அவசியம்.

ஆராய்ச்சி பலன்கள் துண்டு, துண்டுகளாக கிடப்பதை தவிர்த்து, பரவச்செய்தால்தான் விவசாயம் தன்னிறைவு அடையும். பருவநிலை மாறுபாட்டால் ஏற்படும் பாதிப்பு, உற்பத்தி அதிகரிப்பு உள்பட பல்வேறு அம்சங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாய ஆராய்ச்சிகளை நமது நாட்டின் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல வேண்டும். இது நம்மால் நிச்சயம் முடியும்.

இவ்வாறு விஞ்ஞானி பொன்ராஜ் கூறினார்.

வேளாண்மை பல்கலைக்கழக மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.அன்பு, ஓ.வி.ஆர்.சோமசுந்தரம், பல்கலைக்கழக பதிவாளர் பி.சுப்பையன், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மைய இயக்குனர் டி.ஜெயராஜ் உள்பட பலர் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

**கேர்கம்பையில் சிறு விவசாயிகள் சங்க தொடக்க விழா**

*கோத்தகிரி, ஆக.25–*

*கோத்தகிரி அருகே உள்ள கேர்கம்பையில் எத்தையம்மன் சிறு விவசாயிகள் சங்க தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு ஊர் முக்கியஸ்தர் ராமன் தலைமை தாங்கினார். பில்லன், கிராம நிர்வாக அலுவலர் போஜராஜன், தொழில் அதிபர் கன்னவரை ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*சிறப்பு அழைப்பாளர்களாக உபாசி வேளாண்மை அறி வியல் மைய தலைமை விஞ்ஞானி டாக்டர் குமாரவடி வேலு, தொழில்நுட்ப வல்லு னர் டாக்டர் சண்முகம், வளர்ச்சி அலுவலர் நிப்பான் பர்மன் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக சில்ல பாபு வரவேற்று பேசி னார். நிகழ்ச்சியில் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டனர்.*